29.04.2024

CC. 94/2017

PW-1, விருமாண்டி.

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி.**

சம்பவம் நடந்த தேதி வருடம் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கும் எதிரிக்கும் என்ன பிரச்சினை என்றால் இடம் சம்பந்தமாக பிரச்சினை ஏற்பட்டு இந்த வழக்கு சம்பவம் ஏற்பட்டது. தாவா இடம் யாருக்கு பாத்தியப்பட்ட இடம் எங்களுக்கு பாத்தியப்பட்ட இடம். எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. என் பெயரில் இருந்து அதை என் மகளுக்கு கொடுத்துள்ளேன். நான் எதிரியின் மனைவியிடம் இருந்து தான் கிரையம் வாங்கினேன். முதலில் பவர் வாங்கி அதன் பிறகு கிரையம் வாங்கிய நான்கு வருடம் கழித்து தான் சம்பவம் நடந்தது. எங்களுக்குள் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை உள்ளதா என்றால் இல்லை. எதிரியை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி எனக்கு உறவினர் தான். மேற்படி சம்பவத்தில் எதிரிக்கு இரத்தக் காயம் ஏற்பட்டதா என்றால் அவர் குடிபோதையில் என்னை தள்ளி அவரும் கீழே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது. அவர் என் மீது புகார் கொடுத்து என் மீதும் வழக்கு பதிவு செய்யபட்டது என்றால் சரிதான். எதிரி கல்லை தூக்கினார். ஆனால் போடவில்லை. போட்டியிருந்தால் சம்பவயிடத்திலேயே இறந்திருப்பேன். புகாரில் கல்லை என் மீது போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரை போலிசார் எழுதியதால் அப்படி எழுதியுள்ளார்கள். புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. பணம் கொடுக்கல் வாங்கலில் தான் எதிரி பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் 10 வருடமாக பணம் திரும்ப கொடுக்காததால் எழுதிக் கொடுத்தார். எதிரி எதற்காக பணம் வாங்கினார் என்றால் அவர் குடும்ப செலவிற்கு என்று வாங்கினார். பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சினை இருந்ததால் எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது சிவில் வழக்கு கொடுத்துவிடுவார் என்று எண்ணி இந்த குற்ற வழக்கை எதிரியின் மீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.